# குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண் – 1, ஒசூர்

## முன்னிலை திரு.R.நரசிம்ம மூர்த்தி LLB.,

## 2026ஆம் ஆண்டு மே மாதம் 21–ம் நாள் வியாழக்கிழமை

## ஆண்டு பட்டிகை வழக்கு எண்:117/2022

## CNR No. TNKI06-001642-2022

| | |
|---|---|
| குற்றமுறையீடுபவர் | காவல் ஆய்வாளர்,<br>சூளகிரி காவல் நிலையம்,<br>குற்ற எண்.608/2020 |
| குற்றம் சாட்டப்பட்டவர் | நாகராஜ் (54)<br>த/பெ. கங்காதரன் |
| குற்றப்பிரிவுகள் | இ.த.ச பிரிவுகள் 279, 304 (A) |
| குற்றம் வனையப்பட்டது | இ.த.ச பிரிவுகள் 279, 304 (A) |
| **வழக்கின் சுருக்கம்** | |
| எதிரி காவலுக்கு உட்படுத்தப்பட்ட நாள் | 16.05.2020 |
| இறுதி அறிக்கை தாக்கல் செய்த நாள் | 25.07.2022 |
| குவிமுச பிரிவுகள் 240, 246, 252 ன் பிரகாரம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 31.10.2023 |
| பல்வகை மனு அதன் முடிவு | – |
| முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை நாள் | 1) அ.சா.1 மு.வி. 21.11.2023<br>கு.வி. 21.11.2023 |

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:22:51 +0530

| | |
|---|---|
| | 2) அ.சா.2 மு.வி. 21.11.2023<br>குவி. 21.11.2023<br>3) அ.சா.3 மு.வி. 21.11.2023<br>குவி. 21.11.2023<br>4) அ.சா.4 மு.வி. 21.11.2023<br>குவி. 21.11.2023<br>5) அ.சா.5 மு.வி. 21.11.2023<br>குவி. 21.11.2023<br>6) அ.சா.6 மு.வி. 19.05.2026<br>குவி. 19.05.2026 |
| கு.வி.மு.ச. பிரிவு 313–ன் கீழ் எதிரியை விசாரித்த நாள் | 20.05.2026 |
| தலைமறைவான எதிரியின் விபரம். மற்றும் ஆஜர் செய்யப்பட்ட விபரம், | – |
| மேல்நீதிமன்றத்தால் பிறப்பிக்கப்பட்ட இடைக்கால தடை மற்றும் அதன் முடிவு விபரம் | – |
| தீர்மானம் மற்றும் முடிவு | 1. **முடிவில் திரண்ட பயனிலிருந்தும் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள்** 279 **மற்றும்** 304 (A) - **ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரியை குவிமுச பிரிவு** 248 (1) **ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது**.<br>**எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு** |

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:22:58 +0530

| | |
|---|---|
| | பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை. |

இந்த வழக்கானது இந்நீதிமன்றத்தில் இறுதி விசாரணைக்காக 20.05.2026 –ம் தேதி அன்று வந்த போது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை 2 திருமதி. V.கனிமொழி, அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.கதிரேசன் அவர்கள் ஆஜராகியும் இரு தரப்பு வாதங்களையும் கேட்டு ஆவணங்களை பரீசிலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்

## <u>தீ ர் ப் பு ரை</u>

**1)** கடந்த 15.05.2020 ம் தேதி 21.00 மணிக்கு சூளகிரி – உலகம் ரோட்டில் தொட்டி அருகில் இவ்வழக்கு விபத்தில் இறந்த சாதப்பா என்பவர் தனக்குச் சொந்தமான TN 24 U 8557 என்ற பதிவெண் கொண்ட Splender இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எதிரி நாகராஜ் தனக்குச் சொந்தமான TN 70 X 9461 என்ற பதிவெண் கொண்ட

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:03 +0530

Discover வண்டியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து திடீரென எந்தவித சிக்னலும் செய்யாமல் வாகனத்தை நிறுத்தியதால் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சாதப்பா ஓட்டி சென்ற வாகனம் நிலைதடுமாறி வாகனத்தின் பின் பக்கம் மோதி மேற்படி விபத்தில் சாதப்பாவிற்கு இறப்பை ஏற்படுத்தியதாக குறிப்பிட்டு எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) –ன் படி தண்டிக்கப்பட வேண்டிய குற்றம் புரிந்துள்ளதாக சூளகிரி காவல் நிலைய காவல் ஆய்வாளர் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2) எதிரிக்கு, இந்நீதிமன்றத்திலிருந்து குவிமுச பிரிவு 204 பிரிவின்கீழ் அனுப்பப்பட்ட அழைப்பாணையின் பேரில் எதிரி ஆஜரானதும், வழக்காவணங்களின் நகல்கள் யாவும் குவிமுச 207 பிரிவின்படி இலவசமாக வழங்கப்பட்டன.

3) இரு தரப்பும் கேட்கப்பட்டு, ஆவணங்கள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்ட பின்னர், இந்நீதிமன்றத்தால் குவிமுச 251 (1) பிரிவின்படி, எதிரியின் மீதான இ.த.ச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ன் கீழான குற்றச்சாராம்சங்களை குவிமுச 251 (2) பிரிவின் கீழ் எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி தான் குற்றவாளி இல்லை, பொய் வழக்கு

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:08 +0530

என்று மறுத்துக் கூறினார். எனவே, இருதரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டது.

4) இந்த வழக்கில் அரசு தரப்பில் எதிரி மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபிக்கும் பொருட்டு அரசு தரப்பில் இவ்வழக்கு விபத்தில் இறந்த சாதப்பாவின் மனைவியும், கேள்விப்பட்ட சாட்சியுமாகிய சரிதா என்பவர் அ.சா.1 ஆகவும், பார்வை மகஜர் சாட்சிகளான கிருஷ்ணன் மற்றும் எர்ரன்னா ஆகியோர்கள் முறையே அ.சா.2 மற்றும் அ.சா.3 ஆகவும், வழக்கு விபத்துச் சம்பவத்தை கண்ணுற்ற சாட்சிகளான சீனிவாசன் த/பெ சொன்னப்பா மற்றும் சீனிவாசன் த/பெ சிக்கன்னா ஆகியோர்கள் முறையே அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகவும், இவ்வழக்கின் புலன்விசாரணை அதிகாரிக்காக சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.குமார் என்பவர் அ.சா.6 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பு சாட்சிப்பட்டியலில் கண்ட 6 முதல் 14 விசாரணை செய்வதிலிருந்து இவ்வழக்கிலிருந்து விலக்களித்து அரசு தரப்பில் மேலொப்பம் செய்யப்பட்டு மேற்படி சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை.

5) மேலும் அரசு தரப்பில் புகார் மனு அ.சா.ஆ.1 ஆகவும், பார்வைமகஜர் அ.சா.ஆ.2 ஆகவும், முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.4 ஆகவும், சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.5 ஆகவும், பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.6 ஆகவும், பிரேத

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:14 +0530

பரிசோதனை அறிக்கை அ.சா.ஆ.7 ஆகவும், TN 24 U 8557 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை அ.சா.ஆ.8 ஆகவும் மற்றும் TN 70 X 9461 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை அ.சா.ஆ.9 ஆகவும் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6) இவ்வழக்கில் விசாரிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமான சங்கதிகள் குறித்து, குவிமுச பிரிவு 313 (1) (b) ன் படி வினவியபோது, எதிரி பொய் சாட்சியம் என அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களை மறுத்தார். மேலும் எதிரி தரப்பில் விசாரணை செய்ய சாட்சியம் யாருமில்லை என்று கூறியதால், எதிரி தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது. எனவே எதிரி தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. அவ்வாறே சான்றாவணம் மற்றும் சான்று பொருட்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

7) இரு தரப்பு வாதங்கள் கூர்ந்து கேட்கப்பட்டன. சாட்சிய சான்றாவணங்கள் கவனமாக பரிசிலீக்கப்பட்டன.

8) இவ்வழக்கில் தீர்மானிக்க வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசுத்தரப்பில் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள இ.த.ச பிரிவுகள் 279

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:19 +0530

மற்றும் 304 (A) –ன் கீழான குற்றங்கள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டுள்ளதா ? இல்லையா ? என்பதே ஆகும்.

**9) தீர்வு :–**

9 (i) அரசு தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் விபத்து குறித்து நடவடிக்கை எடுக்கக்கோரி புகார் கொடுத்ததுகுறித்து நிகழ்நிலைப்புகார்தாரர் அ.சா.1 சரிதா அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக தெளிவாக சாட்சியமளித்துள்ளார் என்றும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் இவ்வழக்கில் இறந்துபோன சாதப்பா என்பவர் இருசக்கர வாகனத்தில் சென்றபோது அவருக்கு முன்னால் சென்ற எதிரி இருசக்கர வாகனத்தை திடீரென அஜாக்கிரதையாக நிறுத்தியதால் சாதப்பா சென்ற வாகனம் எதிரி ஓட்டிச்சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டு சாதப்பாவிற்கு பலத்த காயம் ஏற்பட்டு இறந்துவிட்டார் என்று தெளிவாக சாட்சிமயளித்துள்ளார் என்றும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 இவ்வழக்கில் சம்பவ இடத்தில் வைத்து புலன் விசாரணை அதிகாரியால் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தது குறித்து தெளிவாக சாட்சியமளித்துள்ளார் என்றும், மேலும் இவ்வழக்கு விபத்து குறித்து நிகழ்நிலைப்புகார்தாரரால் புகார் அளித்தது குறித்தும், புகார் மனுவைப் பெற்று வழக்கைப் பதிவு செய்து, சாட்சிய சான்றாவணங்களை சேகரித்தது குறித்தும் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியளித்துள்ள காவல்

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:24 +0530

ஆய்வாளர் அ.சா.6 தெளிவாக சாட்சியமளித்துள்ளார் என்றும், அ.சா.1 முதல் அ.சா.6 ஆகியோர்களின் வாய்மொழி சாட்சியங்களை அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.9 வரையிலான சான்றாவணங்கள் ஒத்திசைந்து அமைந்துள்ளது என்றும், அந்த வகையில் இவ்வழக்கில் வழக்கு விபத்து எதிரியின் அதிவேகமான மற்றும் அஜாக்கிரதையான செயலால் ஏற்பட்டு மேற்சொன்ன சாதப்பா என்பவருக்கு மரணத்தை ஏற்படுத்தியது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்றும், ஆகையால் எதிரியை இதச பிரிவுகள் 279 மற்றும் 304 (A) ன் கீழான குற்றச்சாட்டுகளின் கீழ் குற்றவாளிகள் என தீர்மானித்து எதிரிக்கு தக்க தண்டனை வழங்கி தீர்ப்பளிக்கவேண்டுமென்று வாதிட்டார்.

9 (ii) எதிரி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், இவ்வழக்கில் நிகழ்நிலைபுகார்தாரரான அ.சா.1 சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்ட சாட்சி என்றும், ஆனால் அவர் தனது குறுக்கு விசாரணையில் விபத்துச்சம்பவம் குறித்து தனக்கு யார் கைபேசியில் தகவல் தெரிவித்தார்கள் என்ற விவரத்தினை புகார் மனுவில் குறிப்பிடப்படவில்லையென ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், இவ்வழக்கில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகளாக குறிப்பிடப்பட்டுள்ளபோதும், அவர்கள் இருவரும் தன்னுடைய குறுக்குவிசாரணையின்போது வழக்கு விபத்து சம்பவம் நடந்தபிறகுதான் சம்பவ இடத்தை சென்றடைந்ததாக ஒப்புக்கொண்டுள்ளார்கள் என்றும், எனவே, கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியங்கள் நம்பந்தகுந்த

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:29 +0530

சாட்சியங்கள் அல்ல என்றும், அவர்களுடைய சாட்சியம் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யவில்லையென்றும், இவ்வழக்கில் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது இல்லையென்றும், வழக்கு சம்பவம் தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என்றும் அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக பிறழ்சாட்சியம் அளித்துள்ளார் என்றும், மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது குறுக்கு விசாரணையின்போது அ.சா.ஆ,2 பார்வை மகஜர் ஏற்கனவே தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றும், அதில்தான் காவல் துறையினர் தன்னிடம் கையெழுத்து பெற்றுக்கொண்டனர் என்று சாட்சியமளித்துள்ளார் என்றும், எனவே, அ.சா.3ன் சாட்சியம் இவ்வழக்கில் சம்பவ இடத்தில் வைத்து சாட்சிகள் முன்னிலையில் புலன் விசாரணை அதிகாரியால் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யப்பட்டது என்பதைப் பொறுத்து சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றும், வழக்கு விபத்து நடந்ததாக சொல்லப்படும் இடம் ஒசூர் – உலகம் ரோட்டு மற்றும் இரவு 21.00 மணி என்றும், அந்த நேரத்தில் அந்த சாலையில் தெரு விளக்குகள் ஏதும் இல்லையென்றும், அதனை இவ்வழக்கின் அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள அ.சா.6 தனது குறுக்கு விசாரணையின்போது ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், இறந்துபோன சாதப்பா சாலை விதிகளை முறையாக கடைபிடிக்காமல் முன்னால் செல்லும் வாகனத்தையும் கவனிக்காமல் அஜாக்கிரதையாக தன்னுடைய இருசக்கர வாகனத்தை ஓட்டிவந்து விபத்தை ஏற்படுத்தியுள்ளார் என்றும்,

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:36 +0530

வழக்கு விபத்து எதிரியின் அஜாக்கிரதையால் ஏற்படவில்லையென்றும், வழக்கு விபத்து எதிரியின் அஜாக்கிரதையான செயலால் ஏற்பட்டது என்பதை நிரூபிக்க நம்பத்தகுந்த சாட்சியங்கள் எதையும் அரசு தரப்பில் முன்னிலைப்படுத்தவில்லையென்றும், அரசு தரப்பில், எதிரிக்கு எதிரான இதச பிரிவுகள் 279, 304 (A)ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும், எனவே, சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக அளித்து எதிரியை விடுதலை செய்து தீர்ப்பளிக்கவேண்டுமென்றும் வாதிட்டார்.

9 (iii) இரு தரப்பு வாதமும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. அ.சா.ஆ.1 புகார் மனு மற்றும் அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கையின்படி அரசு தரப்பு வழக்கானது கடந்த 15.05.2020 ம் தேதி 21.00 மணிக்கு சூளகிரி – உலகம் ரோட்டில் தொட்டி அருகில் இவ்வழக்கு விபத்தில் இறந்த சாதப்பா என்பவர் தனக்குச் சொந்தமான TN 24 U 8557 என்ற பதிவெண் கொண்ட Splender இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தபோது எதிரி நாகராஜ் தனக்குச் சொந்தமான TN 70 X 9461 என்ற பதிவெண் கொண்ட Discover வண்டியை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து திடீரென எந்தவித சிக்னலும் செய்யாமல் வாகனத்தை நிறுத்தியதால் இவ்வழக்கு விபத்தில் இறந்துபோன சாதப்பா ஓட்டி சென்ற வாகனம் நிலைதடுமாறி வாகனத்தின் பின் பக்கம் மோதி மேற்படி விபத்தில் சாதப்பாவிற்கு இறப்பை ஏற்பட்டதாக எதிரி மீது இதச பிரிவுகள் 279, 304 (A)ன் படி குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:42 +0530

9 (iv) இவ்வழக்கில் நிகழ்நிலைப்புகார்தாரரும் வழக்கு விபத்தில் இறந்த சாதப்பா என்பவரின் மனைவி அ.சா.1 சரிதா தனது முதல் விசாரணை சாட்சியத்தில், "வழக்கு விபத்தில் இறந்த சாதப்பா தனது கணவர் என்றும், சம்பவத்தைப்பற்றி கேள்விப்பட்டு சம்பவ இடத்திற்குச் சென்று பார்த்தது குறித்தும், அதன்பிறகு ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று சிகிச்சையளித்தது குறித்தும், மேல்சிகிச்சைக்காக சேலம் மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றபோது அவருக்கு தலையில் அறுவைசிகிச்சை செய்தது குறித்தும், அதன்பிறகு சிகிச்சை பலனின்றி தனது கணவர் இறந்தது குறித்தும், விபத்து சம்பந்தமாக காவல் நிலையத்திற்கு சென்று புகார் கொடுத்ததாகவும், காவல் துறையினர் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில் வழக்கு விபத்துச்சம்பவத்தை தான் நேரில் பார்க்கவில்லையென்றும், வழக்கு விபத்துச்சம்பவத்தை கைபேசியில் தனக்கு விவரம் தெரிவித்ததன் அடிப்படையில்தான் மேற்படி சம்பவம் குறித்து தெரிந்து கொண்டதாகவும் ஒப்புக்கொண்டுள்ளார். மேலும் அவர் தனது குறுக்கு விசாரணையில் அ.சா.ஆ.1 – புகார் மனுவில் வழக்குச் சம்பவத்தை யார் நேரில் பார்த்தார் என்றும், யார் தனக்கு கைபேசியில் தகவல் தெரிவித்தார்கள் என்றும் குறிப்பிடவில்லையென்று ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, அ.சா.1 வழக்குச் சம்பவத்தை நேரடியாக் பார்க்கவில்லையென்பது புலப்படுகிறது.

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:47 +0530

9 (v) இந்நிலையில் இவ்வழக்கில் அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அ.சா.4 சீனிவாசன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் சூளகிரியில் ஹார்டுவேர் கடை வைத்துள்ளதாகவும், வழக்கு விபத்தில் இறந்த சாதாப்பவைத் தெரியும் என்றும், கடந்த 15.05.2020ம் தேதி இரவு சுமார் 09.00 மணியளவில் கடையிலிருந்து தானும் தனது ஊரைச் சேர்ந்த அ.சா.5 சீனிவாசன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றபோது சூளகிரியிலிருந்து 7 கிலோமீட்டர் தொலைவில் தொட்டி என்ற இடத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் ஒன்றுக்கொண்டு மோதி கீழே கிடந்தது என்றும், சாதாப்பாவின் தலையில் அடிபட்டு மயக்க நிலையில் இருந்தார் என்றும், இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த எதிரி அந்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தார் என்றும், தற்போது நீதிமன்றத்தில் ஆஜராகியிருக்கும் எதிரிதான் அவர் என்றும், எதிரியைத் தனக்குத் தெரியும் என்றும், மயக்க நிலையில் இருந்த சாதப்பாவிற்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தோம் என்றும், ஆனால் அவர் தண்ணீர் அருந்தவில்லை என்றும் பிறகு சாதப்பாவின் மனைவிக்கு தகவல் தெரிவித்ததாகவும், பின்பு ஆம்புலன்ஸ் மூலம் சாதப்பாவை சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள் என்றும், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையிலிருந்து தருமபுரி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றும், அறுவைசிகிச்சை பலனளிக்காமல் சாதப்பா இறந்துவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டதாகவும், விபத்து

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:53 +0530

சம்பந்தமாக காவல் துறையினர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். அ.சா.4ன் மேற்படி சாட்சியத்தினை கருத்தில் கொள்கையில் அவர் சம்பவ இடத்திற்கு வந்தபோது இரண்டு இருசக்கர வாகனங்கள் மோதி கீழே விழுந்து கிடந்ததைப் பார்த்ததாகவே சாட்சியமளித்துள்ளார் என்பது புலப்படுகிறது. இந்நிலையில் அ.சா.4 தனது குறுக்கு விசாரணையில் தான் விபத்துச் சம்பவம் நடந்தபிறகுதான் சம்பவ இடத்திற்குச் சென்றதாக ஒப்புக்கொண்டுள்ளார். எனவே அ.சா.4 விபத்து ஏற்பட்டபோது சம்பவத்தை நேரடியாகப் பார்க்கவில்லையென்பது நன்கு புலப்படுகிறது.

9 (vi) மேலும் வழக்கு விபத்தைக் கண்ணுற்ற மற்றொரு சாட்சியான அ.சா.5 சீனிவாசன் தனது முதல் விசாரணை சாட்சியத்தில் தான் ஒசஹல்லியில் குடியிருந்து விவசாயம் செய்து வருவதாகவும், வழக்கு விபத்துச் சம்பவத்தில் இறந்துபோன சாதப்பாவைத் தெரியும் என்றும், தேதி மாதம் ஞாபகம் இல்லை 2020ம் ஆண்டு ஒரு நாள் இரவு சுமார் 8 – 9 மணியளவில்தான் சூளிகிரயிலிருந்து ஒசஹல்லிக்கு இரு சக்கர வாகனத்தில் சென்றகொண்டிருந்தபோது தனக்கு முன்பு தங்கள் ஊரைச் சேர்ந்த அ.சா.4 சீனிவாசன் என்பவரும் இருசக்கர வாகனத்தில் சென்றுகொண்டிருந்தார் என்றும், அப்போது தொட்டி என்ற இடத்தில் இரண்டு இருசக்கர வாகனங்கள் ஒன்றுக்கொண்டு மோதி கீழே கிடந்தது என்றும், சாதாப்பாவின் தலையில் அடிபட்ட மயக்க நிலையில் இருந்தார்

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:23:58 +0530

என்றும், மயக்க நிலையில் இருந்த சாதப்பாவிற்கு தண்ணீர் கொண்டுவந்து கொடுத்தோம் என்றும், ஆனால் அவர் தண்ணீர் அருந்தவில்லை என்றும் பிறகு சாதப்பாவின் மனைவிக்கு தகவல் தெரிவித்ததாகவும், பின்பு ஆம்புலன்ஸ் மூலம் சாதப்பாவை சிகிச்சைக்காக அழைத்துச்சென்றார்கள் என்றும், கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையிலிருந்து தருமபுரி அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்காக சேரத்தார்கள் என்றும், அறுவைசிகிச்சை பலனளிக்காமல் சாதப்பா இறந்துவிட்டதாக தகவல் தெரிந்துகொண்டதாகவும், விபத்து சம்பந்தமாக காவல் துறையினர் தன்னை விசாரித்ததாகவும் சாட்சியமளித்துள்ளார். மேலும் அ.சா.5ன் சாட்சியத்தினை நன்கு பரிசீலிக்கையில் அவர் சென்று பார்த்தபோது இரண்டு இரு சக்கர வாகனங்கள் மோதி கீழே விழுந்து கிடந்தது என்று சாட்சியமளித்துள்ளார் என்பது புலப்படுகிறது. இந்நிலையில் அ.சா.5 தனது குறுக்கு விசாரணையில் விபத்துச் சம்பவம் நடந்தபிறகுதான் சம்பவ இடத்திற்குச் சென்றடைந்ததாக சாட்சியமளித்துள்ளார், எனவே அ.சா.5 வழக்கு விபத்தை நேரடியாகப் பார்க்கவில்லையென்பது புலப்படுகிறது.

9 (vii) அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் கண்ணுற்ற சாட்சிகளாக அரசு தரப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளபோதும், அவர்கள் தங்களுடைய குறுக்கு விசாரணையின் போது வழக்கு விபத்துச் சம்பவம் நடந்துமுடிந்தபிறகுதான் சம்பவ இடத்தைச் சென்றடைந்ததாக

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:24:04 +0530

சொல்லியுள்ள சாட்சியங்களை கருத்தில் கொள்கையில் அவர்களுடைய சாட்சியம் அரசு தரப்பு வழக்கை நிரூபணம் செய்யவில்லையென்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஆகையால் இவ்வழக்கில் எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தை எவ்வித சமிஞ்சை செய்யாமல் அஜாக்கிரதையாக திடீரென நிறுத்தியதால் இறந்துபோன சாதப்பா ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனம் எதிரி ஓட்டிச் சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது என்ற எதிரிக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுகளை அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியங்கள் நிரூபணம் செய்யவில்லையென்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (viii) மேலும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 தனது சாட்சியத்தில் வழக்கு விபத்தில் இறந்த சாதப்பாவை தனக்குத் தெரியாது என்றும், தன்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என்றும், வழக்கு விபத்துச்சம்பவம் தொடர்பாக தனக்கு எந்த விவரமும் தெரியாது என்று அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக சாட்சியமளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் வழக்குவிபத்தில் இறந்த சாதப்பாவைத் தெரியும் என்றும் கடந்த 2, 3 ஆண்டுகளுக்கு முன்பு விபத்துச் சம்பவம் நடந்த இடத்தை சூளகிரி போலிசார் விசாரணை செய்து சம்பவ இடத்தைப் பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்ததில் தான் கையெழுத்திட்டதாகவும் அதில் உள்ள கையெழுத்து

NARASIMMA MOORTHI Digitally signed by NARASIMMA MOORTHI Date: 2026.05.21 18:24:09 +0530

தன்னுடையதுதான் என்றும் சாட்சியமளித்துவிட்டு தன்னுடைய குறுக்கு விசாரணையில் தான் தட்டச்சு செய்த தாள்களில்தான் கையெழுத்து செய்தேன் என்று அரசு தரப்பு வழக்கிற்கு முறனாக சாட்சியமளித்துள்ளார். அ.சா.2 பார்வை மகஜரில் உள்ள கையெழுத்து தன்னுடையது அல்ல என மறுத்துள்ள நிலையில் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தின் உண்மைத்தன்மை குறித்தும் இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை குறித்தும் பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகிறது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (ix) இந்நிலையில் புலன்விசாரணை அதிகாரிக்காக சூளகிரி காவல் நிலைய தற்போதைய சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் குமார் அவர்கள் ஆவணங்களின் அடிப்படையில் அ.சா.6 ஆக இவ்வழக்கில் புலன் விசாரணை அதிகாரியால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை குறித்தும், சாட்சிய சான்றாவணங்களை சேகரித்தது குறித்தும் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியமளித்துள்ளார். இருப்பினும், இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 மற்றும் பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 ஆகியோர்களின் சாட்சியங்கள் அரசு தரப்பு வழக்கை ஒத்திசைந்து அமைந்திராத நிலையில் புலன் விசாரணை அதிகாரிக்காக சாட்சியமளித்துள்ள அ.சா.6ன் சாட்சியம் மட்டுமே இவ்வழக்கில் எதிரிக்கு

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:24:15 +0530

எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்ய போதுமானது என கருத்தில் கொள்ள இயலாது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

9 (x) இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்களின் சாட்சியம் அரசு தரப்பு வழக்கிற்கு ஒத்திசைந்து அமையாத நிலையிலும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.2 பிறழ்சாட்சியம் அளித்துள்ள நிலையிலும், ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியமளித்துள்ள காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர் அ.சா.6 மற்றும் சம்பவத்தைப் பற்றி கேள்விப்பட்டு புகார் அளித்த அ.சா.1ன் சாட்சியம் மட்டுமே இவ்வழக்கில் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டுகளை நிரூபணம் செய்யப்பட்டதாக ஏற்க இயலாது என்றும் இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே, இவ்வழக்கில் எதிரி எதிரி TN 70 X 9461 என்ற பதிவெண் கொண்ட Discover வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று திடீரென எந்தவித சிக்னலும் இல்லாமல் வண்டியை நிறுத்தியபோது இறந்துபோன சாதப்பா ஓட்டி வந்த TN 24 U 8557 என்ற பதிவெண் கொண்ட Splender இருசக்கர வாகனம் அதற்கு முன்னால் சென்ற எதிரி ஓட்டிச்சென்ற வாகனத்தின் மீது மோதி விபத்தை ஏற்பட்டு சாதாப்பாவிற்கு மரணம் ஏற்பட்டது என்ற எதிரிக்கு எதிரான அரசு தரப்பு குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்ய தவறிவிட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

NARASIMMA MOORTHI Digitally signed by NARASIMMA MOORTHI Date: 2026.05.21 18:24:21 +0530

9 (xi) ஆகையால் இவ்வழக்கில் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ள அரசு தரப்பு சாட்சிய சான்றாவணங்களை கருத்தில் கொள்கையில், எதிரி TN 70 X 9461 என்ற பதிவெண் கொண்ட Discover வண்டியை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி சென்று திடீரென நிறுத்தியதால் பின்னால் வந்த இறந்துபோன சாதப்பா ஓட்டி வந்த TN 24 U 8557 என்ற பதிவெண் கொண்ட Splender இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதில் சாதப்பா என்பவருக்கு மரணம் ஏற்பட்டது என்ற எதிரிக்கு எதிரான இ.த.ச.பிரிவு 279 மற்றும் 304 (A)ன் கீழான குற்றச்சாட்டுகளை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றே இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது. எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு சாதகமாக பாவித்து எதிரி இ.த.ச.பிரிவு 279 மற்றும் 304 (A)ன் கீழ் குற்றவாளி இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

9 (xii) முடிவில் திரண்ட பயனிலிருந்தும் எதிரி மீது இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 279, மற்றும் 304 (A) ன் கீழ் வனையப்பட்ட குற்றச்சாட்டுகளிலிருந்து எதிரி குற்றவாளி அல்ல என தீர்மானித்து மேற்கண்ட குற்றங்களிலிருந்து எதிரியை குவிமுச பிரிவு **248 (1)** ன் கீழ் விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. எதிரியின் பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் ரத்துச் செய்ய உத்திரவிடப்படுகிறது. இவ்வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே, வழக்கு சொத்து குறித்து எவ்வித உத்தரவும் இல்லை.

NARASIMMA MOORTHI

Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:24:27 +0530

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு மே மாதம் 21-ம் நாள் திறந்த இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:24:33 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்

**குறிப்பு**

1. எதிரி விசாரணை காலத்தில் பிணையில் இருந்தார்கள்.
2. எந்த சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் விசாரிக்காமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3). இந்த வழக்கில் வழக்கு சொத்து எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

**பின் அட்டவணை**

**1. குற்ற முறையீட்டாளர் தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| வ. எண் | சாட்சியின் பெயர் | சாட்சியின் வரிசை |
|---|---|---|
| 1. | திருமதி. சரிதா | அ.சா.1 |
| 2. | திரு.கிருஷ்ணன் | அ.சா.2 |
| 3. | திரு.ஈரன்னா | அ.சா. 3 |
| 4. | திரு.சீனிவாசன் த/பெ சொன்னப்பா | அ.சா. 4 |

| | | |
|---|---|---|
| 5. | திரு.சீனிவாசன் த/பெ சிக்கன்னா | அ.சா. 5 |
| 6. | திரு.குமார், சிறப்பு காவல் உதவி ஆய்வாளர், சூளகிரி காவல் நிலையம் | அ.சா.6 |

**<u>2). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்</u>**

| **வ. எண்** | **ஆவண விவரம்** | **சான்றாவண வரிசை** |
|---|---|---|
| 1. | புகார் மனு | அ.சா.ஆ.1 |
| 2. | பார்வை மகஜரில் உள்ள அ.சா.2ன் கையெழுத்து | அ.சா.ஆ.2 |
| 3. | முதல் தகவல் அறிக்கை | அ.சா.ஆ.3 |
| 4. | மாதிரி வரைபடம் | அ.சா.ஆ.4 |
| 5. | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.ஆ.5 |
| 6. | பிரேத விசாரணை அறிக்கை | அ.சா.ஆ.6 |
| 7. | பிரேத பரிசோதனை அறிக்கை | அ.சா.ஆ.7 |
| 8. | TN 24 U 8557 – மோட்டார் வாகன ஆய்வாளர்அறிக்கை | அ.சா.ஆ.8 |
| 9. | TN 70 X 9461 – மோட்டார் வாகன ஆய்வாளர்அறிக்கை | அ.சா.ஆ.9 |

**<u>3). குற்ற முறையீட்டாளர் தரப்பு சான்று பொருட்கள் பட்டியல்</u>**

| **வ.எண்** | **சான்று பொருள் விவரம்** | **சான்று பொருள் வரிசை** |
|---|---|---|
| – | – | – |

**4). எதிரி தரப்பு சாட்சிகள் பட்டியல்**

| **வ.எண்** | **சாட்சியின் பெயர்** | **சாட்சியின் வரிசை** |
|---|---|---|
| – | – | – |

**5). எதிரி தரப்பு சான்றாவணங்களின் பட்டியல்**

| **வ.எண்** | **தேதி** | **ஆவண விவரம்** | **சான்றாவண வரிசை** | **தன்மை** |
|---|---|---|---|---|
| – | – | – | – | – |

NARASIMMA MOORTHI
Digitally signed by NARASIMMA MOORTHI
Date: 2026.05.21 18:24:39 +0530

நீதித்துறை நடுவர் எண்.1,
ஒசூர்

**நகல்:** மாண்புமிகு தலைமை குற்றவியல் நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.